# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


13-7-2010

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!

## மாமன்னன் இராஜராஜ சோழன் நினைவு இடத்தில் மண்டபம் அமைத்து, தஞ்சை பெரிய கோயில் விழாவை அரசு சிறப்பாக நடத்த வேண்டும்.

ஒவ்வொரு நாடும் தனது பழம்பெருமை அடையாளத்தைத் தனது வாரிசுகளுக்காகப் பாதுகாத்து வருகிறது. இதன் அவசியத்தை அறிந்துள்ள மேற்கத்திய நாடுகள் சில நூறு ஆண்டுகள் ஆன கலைப்பொக்கிஷத்தைப் பாதுகாத்து, அதன் பெருமையாக உலகிற்கு அறிவித்து வருகிறது. இதன் மூலம் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளை ஈர்த்து கோடி கோடியாய் அன்னிய செலாவணியும் ஈட்டி வருகின்றன.

நமது முன்னோர்கள் நமது நாட்டின் சரித்திர நிகழ்வுகளை வருங்காலம் அறிந்துகொள்ள கல்வெட்டுகளாக ஏற்படுத்தி வைத்துள்ளனர். இதனைப் பலரும் அறிந்துகொள்ள சமுதாயப் பொது இடமாகத் திகழும் ஆலயத்தில் பதித்துள்ளனர். இதனை நமது அரசு பாதுகாத்து, பதிவு செய்யத் தவறி வருகிறது. இதனால் பல வரலாற்றுச் சுவடுகளை நாம் இழந்து வருகிறோம்.

பல நூறு கோடி செலவு செய்து செம்மொழி மாநாடு நடத்திய தமிழக அரசு, நமது தொன்மை வரலாற்றைப் பாதுகாக்க சில கோடிகளையாவது ஒதுக்கி அனைத்துக் கோவில்களிலும் உள்ள கல்வெட்டுகளை நவீன தொழிற்நுட்ப உதவி கொண்டு பதிவு செய்ய வேண்டும், பாதுகாக்க வேண்டும், பரப்ப வேண்டும். அந்தந்தக் கோயில்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வரலாற்று விஷயங்களை மக்கள் அறியும் வண்ணம் ஒளிவு மறைவின்றி பரப்ப வேண்டும்.

தஞ்சையை ஆண்ட மாமன்னன் இராஜராஜசோழன் கட்டிய உலகப் புகழ்பெற்ற அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில் எனும் பெருவுடையார் கோயில் ஆயிரமாவது ஆண்டு விழாவை அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாட முதல்வர் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த நல்ல நேரத்தில் சிதிலமடைந்து, கேட்பாரற்றுக் கிடக்கும் இராஜராஜ சோழ மன்னனின் சமாதியைச் சீர் செய்து, அவரது சமாதி இருக்கும் உடையாளூரில் அழகிய நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்று இந்து முன்னணி தமிழக முதல்வரைக் கோருகிறது.

இவ்விழாவானது தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை உலகறியச் செய்ய அரிய வாய்ப்பு. ஆயிரம் ஆண்டு கலைக்கோயிலாகத் திகழும் தஞ்சை பெரிய கோயில் வரலாறும், இராஜராஜ சோழன் வரலாறும் இந்துக்களின் தன்மானத்தைத் தலைநிமிரச் செய்பவை.

தஞ்சை மாவட்டத்தில் பிறந்து, வளர்ந்த தமிழக முதல்வர் அவர்கள், தான் பிறந்த மண்ணின் பெருமையை உலகறியச் செய்ய ஆவன செய்யுமாறு இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்

---

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**